# தொண்டைமானாறு கடல் நீரேரியின் உவர்ப்பியத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் உள்ளூர் மீன்பிடிசார் வாழ்வாதாரங்களில் எதிர்நோக்கப்படும் சவால்களும்

**பகிர்தா, உ., இராஜசூரியர், எல். டி.**
புவியியற்றுறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
pakirtha600@gmail.com

*யாழ்குடா நாட்டின் ஏரிகளில் ஒன்றாகத் தொண்டைமானாறு ஏரி காணப்படுகின்றது. இங்கு மேற்கொள்ளப்படும் உவர் நீரை நன்னீராக்கும் தடுப்பணைச் செயன்முறை ஏரிச் சூழல் தொகுதியை மாற்றமடையச் செய்கின்றது. இம் மாற்றங்களானவை ஏரியில் காணப்படும் தாவரங்கள் (Flora), விலங்குகளில் (Fauna) ஏற்கனவே அவதானிக்கப்பட்டது. இவ் ஆய்வின் நோக்கங்களாக உவர்ப்பிய மாற்றம் காரணமாக மாறிவரும் தொண்டைமானாறு ஏரிப் பகுதியின் சூழலியல் மாற்றங்களை இனங்காண்பதும், மீன்வளங்களின் மாற்றங்களை அடையாளப்படுத்துவதும், இம் மாற்றங்கள் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களை மதிப்பீடு செய்வதாகவும் காணப்படுகின்றது. ஆய்விற்காக முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் விபரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு முறைக்கூடாக ஆய்வானது முன்னெடுக்கப்பட்டது. உவர்ப்பியத்தில் ஏற்பட்டு வரும் மாற்றம் காரணமாக ஏரிச் சூழல் தொகுதியில் தாவர இனங்களில் மாற்றம் மற்றும் மீனினங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளதோடு முதலைகளின் பெருக்கமும் கண்டறியப்பட்டது. கடல் நீரேரிப் பகுதியில் உவர்ப்பியமானது அதிகமாகக் காணப்படுகின்றபோது மருதோண்டி, வெண்ணொச்சி, விளாய், மருது, காய்விளாய், புன்னை, சிறுசவுக்கு, தான்றி ஆகிய தாவர வகைகள் காணப்பட்டன. ஆயினும், தற்போது உவர்ப்பியமானது குறைவடைந்து செல்லுகையில் கழுதைமுள்ளி, பிரமதாஞ்சு, தாளை, எருக்கலை, அடம்பன் கொடி, எருமைமுல்லை, வாகல், பார்த்தீனியம் ஆகிய தாவர இனங்களின் செல்வாக்கு அதிகமாக காணப்படுகின்றது. மாற்றமடையாத தாவர இனங்களாக செங்கன்குப்பி, தில்லை, வெண் கண்டல், திம்பரத்தை போன்ற தாவர இனங்கள் ஏரிப் பகுதியில் நிலைத்திருக்கின்றன. கடல் நீரேரி விலங்கினங்களில் நண்டு, இறால் இனங்கள் பெரும்பாலும் அழிவடைந்த நிலையிலும் திலாப்பியா, கொடுவா, பலுகு, பாலை, கெழுறு போன்ற இனங்கள் ஏரிப் பகுதியில் அதிகரித்த நிலையிலும் காணப்பட்டன. இம் மாற்றங்களிற்கு கடல் நீரேரிப் பகுதியின் உவர்த் தன்மை குறைவே காரணமாக அமைந்துள்ளது. நண்டு மற்றும் இறாலிற்கான சந்தைகளுடன் ஒப்பிடுகையில் தற்போது ஏரிப் பகுதியில் காணப்படும் மீன்களிற்கான சந்தை வாய்ப்பும், விலைகளும் குறைவாகக் காணப்படுவதால் மீனவர்களின் வருமானம் குறைவடைந்துள்ளது. கிடைக்கப் பெறுகின்ற வருமானம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த போதுமானதாகக் காணப்படாத தால் ஏரி மீனவர்கள் பல்வேறான சவால்களை எதிர்கொள்கின்றனர். ஆயினும் பரம்பரையாக மீன்பிடித்தொழில் செய்து வருபவர்களில் ஏறத்தாழ 80% ஆனோர் வேறு தொழில் செய்ய விரும்பாமல் தொடர்ந்து மீன்பிடியை மேற்கொள்கின்றனர், 14% ஆனோர் மீன்பிடியுடன் இணைந்து வேறு தொழில் மேற்கொள்கின்றனர். 6% ஆனோர் மீன்பிடியைக்*